# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–600 006

## இடைநிலை/மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளில் ஒழுங்கீனச் செயலில் ஈடுபடுவோர் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த

## செய்திக் குறிப்பு

| வ. எண். (1) | குற்றத்தின் தன்மை (Nature of Offence) (2) | தண்டனையின் அளவு (Scale of Punishment) (3) |
|---|---|---|
| 1. | தேர்வர்கள் தேர்வின்போது அச்சடித்த புத்தகங்கள் கையேடுகள் அல்லது கையெழுத்துப் பிரதி ஏதேனும் தன் வசம் வைத்திருந்து தாமாகவே அறைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தல். | முதன்மைக் கண்காணிப்பாளரால் எச்சரிக்கை செய்யப்படுவார். தேர்வர் இத்தவறினை அதே பருவத்தில் மீண்டும் செய்தால் அவரிடமிருந்து எழுத்துப் பூர்வ விளக்கம் பெற்று வெளியேற்றப்படுவார். அடுத்து வரும் தேர்வுகளை எழுத தடையில்லை. |
| 2. | தேர்வர்கள் அச்சிடப்பட்ட புத்தகங்கள், கையேடுகள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் துண்டுச் சீட்டுகள் ஏதேனும் தன்வசம் வைத்திருப்பதை அறைக் கண்காணிப்பாளரால் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை தேர்வர்கள் பயன்படுத்தவில்லை என்பது தெரிய வந்தால். | தேர்வரிடமிருந்து எழுத்துப் பூர்வமாக விளக்கம் பெற்று மையத்தை விட்டு முதன்மைக் கண்காணிப்பாளரால் வெளியேற்றப்படுவார். அடுத்து வரும் தேர்வுகளை எழுத தடையில்லை.<br><br>தேர்வர் ஆட்சேபனைக்குரிய பொருட்களை தன்வசம் வைத்திருந்து அவற்றை பயன்படுத்தாமல் இருப்பது கண்டறியப்பட்டால் அன்றைய தேர்வு இரத்து செய்யப்படும்.<br><br>தேர்வர் ஆட்சேபனைக்குரிய பொருட்களை தன் வசம் வைத்திருந்து பயன்படுத்தி இருந்தால் அன்றைய தேர்வு இரத்து செய்யப்படுவதுடன் மேலும், அடுத்த ஓராண்டு அதாவது இரு பருவத் தேர்வுகள் எழுத தடை விதிக்கப்படும். |

| வ. எண். (1) | குற்றத்தின் தன்மை (Nature of Offence) (2) | தண்டனையின் அளவு (Scale of Punishment) (3) |
|---|---|---|
| 3. | தேர்வர் மற்றத் தேர்வரின் விடைத்தாளை பார்த்து தேர்வெழுதியிருந்தாலோ அல்லது பிறரின் உதவியினை தேர்வறைக்கு உள்ளேயோ அல்லது வெளியில் இருந்து பெற்றது கண்டறியப்பட்டால். | தேர்வரிடமிருந்து எழுத்துப் பூர்வமாக விளக்கம் பெற்று மையத்தை விட்டு முதன்மைக் கண்காணிப்பாளரால் வெளியேற்றப்படுவார்.<br><br>அடுத்து வரும் பாடத் தேர்வுகளை எழுத தடையில்லை.<br><br>தேர்வு இரத்து செய்யப்படுவதுடன், சூழ்நிலை மற்றும் சான்றுகளின் அடிப்படையில் ஓர் ஆண்டு அல்லது அடுத்த இருபருவத் தேர்வுகளுக்கும் அதிகமான பருவங்கள் தேர்வெழுத தடை விதிக்கப்படும். |
| 4. | ஒரு தேர்வர் துண்டுத்தாளை தன்வசம் வைத்திருந்து பார்த்து எழுதியிருந்தாலோ / எழுத முயற்சி செய்தது கண்டறியப்பட்டால். | தேர்வர் அப்பருவத்தில் எழுதிய அனைத்து பாடத் தேர்வுகளும் இரத்து செய்யப்படுவதுடன் குற்றத்தின் தன்மை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அடுத்த இரு பருவங்களுக்கும் தேர்வெழுத தடை விதிக்கப்படும். |
| 5. | தேர்வர்கள் அல்லது அவரைச் சார்ந்த நபர்கள் தேர்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுடன் தொடர்பு கொண்டு உதவி பெற நிர்பந்தித்து இருந்தால். | அப்பருவத் தேர்வு தடை செய்யப்பட்டு சூழ்நிலை மற்றும் சான்றுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட காலம் வரை தேர்வெழுத தடை விதிக்கப்படும். |
| 6. | ஆள்மாறாட்டம் செய்தல். | அப்பருவத் தேர்வு இரத்து செய்யப்படுவதுடன் தேர்வு எழுத நிரந்தர தடை விதிக்கப்படும். |
| 7. | விடைத்தாளை பரிமாற்றம் செய்தல். | தேர்வுகள் இரத்து செய்யப்படுவதுடன், சூழ்நிலை மற்றும் சான்றுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட பருவங்கள் தேர்வெழுதத் தடை விதிக்கப்படும். |

| வ. எண். (1) | குற்றத்தின் தன்மை (Nature of Offence) (2) | தண்டனையின் அளவு (Scale of Punishment) (3) |
|---|---|---|
| 8. | தேர்வர்கள் விடைத்தாளில் தவறான அல்லது புண்படுத்தும் வார்த்தைகளை எழுதினாலோ அல்லது தேர்ச்சி மதிப்பெண்களை வழங்குமாறு விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கோ அல்லது அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கோ கடிதம் எழுதி இருந்தால். | குறிப்பிட்ட பாடத் தேர்வு இரத்து செய்யப்படும். |
| 9. | தேர்வறை கண்காணிப்பாளரிடம் தேர்வறையில் அல்லது தேர்வறைக்கு வெளியில் தவறாக நடந்து கொண்டால். (தகாத வார்த்தைகளால் திட்டுதல் / தாக்குதல்) | முதன்மைக் கண்காணிப்பாளர் உத்தரவுப்படி தேர்வறையிலிருந்து வெளியேற்றப்படுவதுடன் பிற பாடத் தேர்வுகளும் எழுத தடை விதிக்கப்படுவார் அல்லது தேர்வுகள் இரத்து செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட பருவங்கள் தேர்வு எழுத தடை / நிரந்தர தடை விதிக்கப்படும். |
| 10. | விடைத்தாளை தேர்வு அறைக்கு வெளியே எடுத்து செல்வது அல்லது அறைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் சென்றுவிட்டு உடனடியாக திரும்ப வந்து ஒப்படைத்தல் / ஒப்படைக்காவிட்டாலும், தேர்வறையில் விடைத்தாளை கிழித்தல். | தேர்வர் முதன்மைக் கண்காணிப்பாளரால் எச்சரிக்கை செய்யப்பட்டு, அப்பாடத் தேர்வு இரத்து செய்யப்படும். |
| 11. | வினாத்தாளை வெளியில் அனுப்புதல் | தேர்வு இரத்து செய்யப்பட்டு மூன்றாண்டுகள் அதாவது அடுத்தடுத்த ஆறு பருவத் தேர்வுகள் இரத்து செய்யப்படும். |
| 12. | அறைக் கண்காணிப்பாளர் அல்லது முதன்மைக் கண்காணிப்பாளரிடம் விளக்கம் அளிக்க மறுத்தல். | அப்பாடத் தேர்வு இரத்து செய்யப்படுவதுடன் அடுத்துவரும் பாடத் தேர்வுகளும் எழுத தடை விதிக்கப்படும். |
| 13. | மதிப்பீட்டு பணி / சிறப்பு கூர்ந்தாய்வின் போது அகச்சான்றுகளின் அடிப்படையில் பார்த்து எழுதியது கண்டுபிடிக்கப்பட்டால் . | அப்பாடத் தேர்வு இரத்து செய்யப்படுவதுடன் அடுத்துவரும் இருபருவத் தேர்வுகள் எழுத தடை. |

| வ. எண். (1) | குற்றத்தின் தன்மை (Nature of Offence) (2) | தண்டனையின் அளவு (Scale of Punishment) (3) |
|---|---|---|
| 14. | விடைத்தாள் மற்றும் கூடுதல் விடைத்தாள்களில் உள்ளே / வெளியே அடையாளப்படுத்தும்படி சிறப்பு குறியீடுகள் (பெயர் / தலைப்பெழுத்து/ பிற அடையாள குறியீடுகள்) எழுதப்பட்டால். | தேர்வரின் விளக்கத்தினை பெற்ற பின் சூழ்நிலையைப் பொருத்து எச்சரிக்கை அல்லது அப்பாடத் தேர்வு இரத்து செய்யப்படும். |
| 15. | வினாத்தாளில் விடை எழுதி அதை பிறத் தேர்வருக்கு வழங்கும் வகையில் தூக்கி எறிதல் . | அப்பாடத் தேர்வு இரத்து செய்யப்படும். |

ஒம்/–
இயக்குநர்